Reg. No.: | | | | | | |

# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 3

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரை: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் 15)

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15

1. பன்மொழிப் புலவர் என்றழைக்கப்பட்டவர் யார்?
அ) க. அப்பாத்துரையார் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) இளங்குமரனார் ஈ) ஜி.யு. போப்

2. காற்று எதைச் சுமந்து கொண்டுவர வேண்டுமென்று பாரதி அழைக்கிறார்?
அ) கவிதையை ஆ) மகரந்தத் தூளை இ) விடுதலையை ஈ) மழையை

3. 'மலர் போன்ற கை' இதில் 'மலர்' என்பது .............. 'போன்ற' என்பது ...................... 'கை' என்பது ..................... .
அ) உவமஉருபு – உவமை – உவமேயம் ஆ) உவமேயம் – உவமை – உவமஉருபு
இ) உவமை – உவமஉருபு – உவமேயம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

4. 'மலைந்து' – என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை
அ) மலைந்து + உ ஆ) மலைந் + த் + உ
இ) மலை + த்(ந்) + த் + உ ஈ) மலை + த் + த் + உ

5. 'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழியின் பாடப்பகுதியாக உள்ள முதலாயிரத்தின் பாசுரம்
அ) 681 ஆ) 691 இ) 541 ஈ) 641

6. 'நேற்று வருவான்' என்பது .......................
அ) இடவழாநிலை ஆ) இடவழு இ) காலவழாநிலை ஈ) காலவழு

7. பரஞ்சோதி முனிவர் இயற்றாத நூலைக் கண்டறிக.
அ) வேதாரண்யப் புராணம் ஆ) திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா
இ) மதுரை பதிற்றுப்பத்தந்தாதி ஈ) அபிராமி அந்தாதி

8. நண்பகல் எத்திணைக்குரிய சிறுபொழுது?
அ) பாலை ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) குறிஞ்சி

9. மருத நிலத்திற்குரிய பூ
அ) உழிஞைப்பூ ஆ) தும்பைப்பூ இ) வெட்சிப்பூ ஈ) நொச்சிப்பூ

10. கொடை வள்ளல் எழுவரின் கொடைப் பெருமை இடம்பெறும் நூல்
அ) பதிற்றுப்பத்து ஆ) சிறுபாணாற்றுப்படை
இ) பரிபாடல் ஈ) புறநானூறு

11. 'சேந்தன வேந்தன் திரு நெடுங்கண்' எனும் பாடலில் அமைந்த அணி
அ) தீவக அணி ஆ) தன்மை அணி
இ) தற்குறிப்பேற்ற அணி ஈ) உவமை அணி

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
"ஏழைமை வேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ?

12. இப்பாடலில் ஆசிரியர்
    அ) ஔவையார் ஆ) கம்பர் இ) நப்பூதனார் ஈ) நல்வேட்டனார்
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
    அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) கம்பராமாயணம் ஈ) முல்லைப்பாட்டு
14. 'வேழம்' இதன் பொருள்
    அ) குதிரை ஆ) யானை இ) படகு ஈ) வேடன்
15. வேடன் என்பது யாரைக் குறிக்கிறது?
    அ) இராமன் ஆ) இலக்குமணன் இ) கும்பகர்ணன் ஈ) குகன்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 21.ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4x2=8

16. **விடைகளுக்கேற்ற வினா அமைக்க.**
    அ) விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.
    ஆ) பெற்றோர் ம.பொ.சி.க்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம்.
17. மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என கண்ணதாசன் கூறக் காரணம் யாது?
18. கரப் பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.
19. செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
21. 'உலகு' - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5x2=10

22. தொடரில் உள்ள கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடரை மீள எழுதுக:
    வள்ளல் குமணன் **வறுமையால்** வாடி வந்த **புலவனுக்குத்** தனது **தலையைக் கொடுத்து** மங்காப் புகழ் பெற்றான்.
23. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
24. கீழ்க்காணும் தொடரில் உள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) பிறமொழி கருத்துகளை, கதைகளை தமிழ்படுத்தியமையை புலப்படுத்துகிறது.
    ஆ) பிரித்து பேசும் போக்கு வந்து விட்டதால் பிரித்து சொல்கிறேன்.
25. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? - மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
26. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| மரம் வீடு, கவிழும், மரவீடு, அவிழும் |
|---|

    அ) காலை ஒளியினில் மலரிதழ் ..........................
       சோலைப் பூவினில் வண்டினம் ..........................
    ஆ) விரட்டாதீர்கள் பறவைக்கு ..........................
       வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் ..........................
27. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.
28. அறியேன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

29. சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
30. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் உதவியாண்மை என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம்தானே எண்ணெய்யாக இருக்க முடியும்?
    1) எதனைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் கூறுகிறது?
    2) உதவியாண்மை என்பது யாது?
    3) அன்பு என்ற சுடருக்கு எண்ணெய் எது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2x3=6

32. "மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. இராசராச சோழன் மெய்க்கீர்த்தியில் எவற்றுக்கெல்லாம் உவமைப்படுத்தப்பட்டுள்ளான்?
34. அடிபிறழாமல் எழுதுக:
'தென்னன் மகளே' ... எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடல்.
(அல்லது)
நவமணி ... எனத் தொடங்கும் தேம்பாவணிப்பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. தொகாநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
37. வஞ்சப் புகழ்ச்சி அணியை எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.
(அல்லது)
ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின் விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் வரைக.
(அல்லது)
ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.
40. காட்சியைக் கண்டு கவிதுற எழுதுக.



41. விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.




42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Malar : Devi, switch off the lights when you leave the room.
Devi : Yeah. We have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x8=24

43. அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

(அல்லது)

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.
மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி

(அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

(அல்லது)

ஆ) சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.